1981 மே 7] [திரு. கு. ரமணி]

அவர்கள் கேட்டுள்ள முக்கியமான கோரிக்கை அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பஞ்சப்படி பாக்கி. மூன்று தடவை மத்திய அரசு பஞ்சப்படி உயர்த்தி கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் மாநில அரசு ஊழியர்களுக்கு அந்த பஞ்சப்படி உயர்த்திக் கொடுக்கவில்லை என்ற குறையிருக்கிறது. ஒரு பஞ்சப்படியை உயர்த்திக் கொடுப்பதற்கு இப்போது மாநில அரசு முன் வந்துள்ளது. அதுவும் இப்போதிலிருந்து கொடுப்பது என்கிற நிலை. ஆனால் மத்திய அரசினுடைய பஞ்சப்படி கொடுத்த கணக்கு பிரகாரம் நாம் பார்த்தால் அது போன செப்டம்பர் மாதத்திலிருந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டியது. இந்த நிலையில் அவர்களுக்கு மனக்குறை ஏற்படும் என்பதில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்பதை அரசு பார்க்கவேண்டுமென்று கேட்டுக் சொல்கிறேன். அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, பார்த்து கலந்து பேசி தங்களுடைய குறைகளை தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களை சமாதானம் செய்வதற்கும், அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கும் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆயினும் குறைகள் நீடிக்கின்றன. இந்த நிலையில் அவர்களுக்குவேறு வழியின்றி தங்களுடைய ஸ்தாபனத்தில் மூலமாகநடவடிக்கை எடுக்கிறோம் என்று முன்வருகிறார்கள். பல்வேறுசந்தர்ப்பங்களில் அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளைப் பற்றி அரசுக்கு பல கருத்துக்கள் இருக்கலாம்; கண்ணோட்டம்இருக்கலாம்; இருந்த போதிலும் அவர்கள் அரசினுடைய ஊழியர்கள். தொடர்ந்து நிர்வாகத்தில்செயல்பட வேண்டியவர்கள், மக்களுக்கு உதவிட வேண்டியவர்கள் என்ற கண்ணோட்டத்துடன் அரசினுடைய சொந்த ஊழியர்கள் என்ற கண்ணோட்டத்துடன் பரிசீலிக்க வேண்டுமென்று நாம் இங்கே எடுத்து விவாதிக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 10-10]

அரசின் பக்கத்திலேயிருந்து எடுத்துக் கொண்டுள்ள சில நடவடிக்கைகள் பார்த்தால் அது வேதனைக்குரியதாகவும், குழப்பத்தையும். கஷ்டத்தையும் வலுப்படுத்துகிற சந்தேகத்தை ஏற்படுத்துகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை தமிழக சட்ட மன்றத்தில் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஒரு பயமுறுத்தல் மாதிரி ஒரு நடவடிக்கை எடுத்தால் படித்தவர்களை.......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏன் விவாதிக்க வேண்டி இருக்கிறது என்று பிரைமா பேசியை மட்டும் சொல்லுங்கள்.